RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 293 | அக்டோபர்.24 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தள்ளிப்போகும் மதுரை புதிய மேயர் நியமனம் திமுக உட்கட்சி பூசலால் முதல்வர் முடிவு

மதுரை, அக்.24-

மதுரை மேயர் பதவியை இந்திராணி ராஜினாமா செய்த நிலையில் அவருக்கு பதிலாக புதிய மேயர் நியமனத்தை 3 மாதங்களுக்கு தள்ளி வைக்க கட்சித் தலைமை முடிவெடுத்துள்ளதால், மதுரை திமுகவினர் விரக்தியடைந்துள்ளனர்.

மதுரை மாநகராட்சி சொத்து வரி முறைகேட்டில் கணவர் பொன் வசந்த் சிறைக்கு சென்றதால் மேயராக இருந்த இந்திராணியிடம் ராஜினாமா கடிதம் வாங்கி, மேயர் பதவியை கட்சித்தலைமை பறித்தது. அவருக்கு பதிலாக புதிய மேயரை தேர்வு செய்வதற்கு திமுகவினர் இடையே ஒற்றுமையில்லாததால் புதிய மேயரை கட்சித்தலைமையால் உடனடியாக தேர்ந்தெடுக்க முடியவில்லை. அதனால், புதிய மேயர் தேர்வை, திமுக தலைமை 3 மாதங்களுக்கு தள்ளி வைத்துள்ளதாக கூறப்படுகிறது. கட்சித்தலைமையின் இந்த முடிவுக்கு கவுன்சிலர்கள் மத்தியில் ஆதரவும், அதிருப்தியும் கலந்து




வெளிப்பட்டுள்ளது.

இதுகுறித்து திமுக மூத்த கவுன்சிலர்கள் சிலர் கூறுகையில், ''தேர்தல் நேரத்தில் கட்சிக்கு கெட்டபெயர் ஏற்படும் எனக் கருதி, கட்சித்தலைமை மேயர் இந்திராணி பதவியை பறித்தது. ஏற்கெனவே புறநகர் மாவட்ட திமுகவில் அமைச்சர் பி.மூர்த்தி கை ஓங்கிய நிலையில், தற்போது அவரது ஆதரவு கவுன்சிலர் வாசுகியை மாநகராட்சி மேயராக கொண்டுவர முயற்சி செய்கிறார்.

வாசுகியை கொண்டுவந்தால் மாநகர திமுகவிலும் அவரது கை ஓங்கிவிடும் என மாநகர திமுகவினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஆனால், வரும் சட்டப்பேரவை தேர்தலில் மதுரை மாவட்டத்தில் 10 தொகுதிகளையும் கைப்பற்ற திட்டமிடும் திமுக பி.மூர்த்தியின் தேர்வை ஆதரித்தாலும், அதை உடனடியாக கொண்டுவர தயங்குகிறது.

மாநகர திமுகவினர், மூர்த்தி சொல்பவர் வரக்கூடாது என்பதற்காக, மேயர் இந்திராணியின் சமூகத்தை சேர்ந்தவருக்கே மீண்டும் வாய்ப்பு வழங்க வேண்டும் என்கின்றனர். இந்த விவகாரத்தில் பஞ்சாயத்து செய்த அமைச்சர் கே.என்.நேருவால் தீர்வு காண முடியவில்லை. இந்த சூழலில் கட்சித் தலைமை புதிய மேயர் நியமனத்தை 3 மாதங்களுக்கு தள்ளிப்போட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

திமுக தலைமையின் இந்த முடிவு, மார்க்சிஸ்ட் கம்யூ. கட்சியைச் சேர்ந்த துணை மேயர் மாநகராட்சியில் அதிகாரத்தை செலுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்துள்ளது. அவரது தலையீடு நிர்வாகத்தில் அதிகரித்தால் திமுக கவுன்சிலர்களால் செயல்பட முடியாத சூழல் உருவாகும். இது நேரத்தில் கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தும். புதிய மேயர் தேர்வை தள்ளிப்போடாமல் உடனடியாக நியமிக்க வேண்டும்'' என்று கூறினர்.

## வெற்றியைக் கணக்கிட்டு அதிமுக கூட்டணியில் சேர சம்மதம்! 30 தொகுதிகள் கேட்கும் அன்புமணி

சென்னை, அக்.24-

திமுக கூட்டணிக்கு எதிராக அதிமுக கூட்டணியை பலப்படுத்த நினைக்கும் பாஜக, அதற்காக முன்பு அதிமுக மற்றும் பாஜக உடன் கூட்டணியில் இருந்த கட்சிகளை எல்லாம் மீண்டும் தங்கள் பக்கம் கொண்டுவர வரிசையாக காய்நகர்த்தி வருகிறது. அந்த வகையில், பாமக தலைவர் அன்புமணியிடமும் பாஜக தரப்பிலிருந்து பக்குவமாக பேச்சுவார்த்தையைத் தொடங்கி இருக்கிறார்கள்.



கடந்த 2021 சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக கூட்டணியில் அதிமுகவும் பாமகவும் அங்கம் வகித்தன. ஆனால், 2024 மக்களவைத் தேர்தலின்போது பாஜக கூட்டணியைவிட்டு அதிமுக வெளியேறி விட்டது. அப்போது பாமக நிறுவனர் ராமதாஸ் அதிமுகவுடன் கூட்டணி அமைக்க விரும்பினார்.

ஆனால், தலைவர் அன்புமணியோ பாஜக கூட்டணியை விரும்பினார். இறுதியில், அன்புமணியின் விருப்பப்படியே பாஜகவுடன் பாமக கூட்டணி அமைத்தது. அதுவரைக்கும் ராம தாஸ் அன்புமணி இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடு இந்தக் கூட்டணி முடிவை அடுத்து மோதல் போக்காக மாறியது.

அது தற்போது உச்சக்கட்டத்தை அடைந்து பாமக இரண்டுபட்டுக் கிடப்பதால் அந்தக் கட்சிக்குள் குழப்பமான சூழல் நிலவி வருகிறது. அதேசமயம், மக்களவைத் தேர்தலில் ராமதாஸ் விரும்பிய அதிமுகவும், அன்புமணி விரும்பிய பாஜகவும் இப்போது ஒரே கூட்டணியில் இருப்பதால் இருவரையும் சமாதானப்படுத்தி ஒன்றுபட்ட பாமகவை தங்கள் கூட்டணியில் சேர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளை அதிமுகவும், பாஜகவும் தொடங்கியுள்ளன.

அதனை உறுதிப்படுத்தும் விதமாக, பாஜக தேசிய துணைத் தலைவரும், தமிழக தேர்தல் பொறுப்பாளருமான வைஜயந்த் பாண்டா எம்.பி., அண்மையில் சென்னையில் அன்புமணியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார். அவர் ராமதாஸையும் சந்தித்துப் பேசியதாகவும் கூறப்படுகிறது.

அதேபோல், விஜய்யை கூட்டணியில் சேர்க்கவும் அதிமுகவும் பாஜகவும் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. கரூர் சம்பவ நெருக்கடியால் அடுத்த அடியை எடுத்துவைக்க முடியாத நிலையில் இருக்கும் விஜய்யும் அதிமுக கூட்டணியில் இணைய வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

அதிமுக, பாஜக, தவெக கட்சிகளுடன் இன்னும் சில சிறிய கட்சிகளும் இணைந்தால் 2026 தேர்தலில் வெற்றி நிச்சயம் என்று கணக்குப் போட்டு அந்தக் கூட்டணியில் இணைய அன்புமணியும் விருப்பம் தெரிவித்துள்ளார். அதேசமயம் கட்சியை பலப்படுத்தவும், கட்சியை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்லவும் தங்களுக்கு இம்முறை கணிசமான எம்எல்ஏக்கள் தேவை என்பதால் தொடக்கமே 30 தொகுதிகளை டிமாண்ட் வைத்து அன்புமணி பேச்சுவார்த்தையை தொடங்கி இருப்பதாகச் சொல்கிறார்கள்.

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரதம் மேற்கொண்டனர்: திருச்செந்தூரில் கந்தசஷ்டி விழா தொடங்கியது

தூத்துக்குடி, அக்.24-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்தசஷ்டி விழா யாகசாலை பூஜையுடன் நேற்று தொடங்கியது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் விரதம் தொடங்கினர். விழாவையொட்டி நேற்று அதிகாலை ஒரு மணிக்கு நடை திறக்கப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பின்னர், சுவாமி ஜெயந்திநாதர் வள்ளிதெய்வானை அம்மனுடன் யாகசாலையில் எழுந்தருளினார்.



கோயில் தக்கார் ரா.அருள்முருகன், இணை ஆணையர் க.ராமு ஆகியோரிடம் காப்பு கட்டிய சோமாஸ் கந்தர் பட்டர் தாம்பூலம் பெற்று, யாகசாலை பூஜையை தொடங்கினார். பின்னர், விக்னேஸ்வர பூஜை, கும்ப பூஜை, ஹோம பூஜைகள் நடைபெற்றன.

மூலவர் மற்றும் சண்முகருக்கு உச்சிகால தீபாராதனைக்கு பின்னர் யாகசாலையில் சுவாமி ஜெயந்திநாதருக்கு மகா தீபாராதனை நடைபெற்றது. பின்னர் சுவாமி ஜெயந்திநாதர் வள்ளிதெய்வானையுடன் தங்க சப்பரத்தில் எழுந்தருளி சண்முக விலாச மண்டபம் சேர்ந்தார்.

அங்கு சுவாமிக்கு மகா தீபாராதனை நடைபெற்றது. பின்னர், சுவாமி திருவாவடுதுறை ஆதின கந்தசஷ்டி மண்டபத்துக்கு எழுந்தருளினார். தொடர்ந்து, சுவாமியும் அம்மனும் தங்க ரதத்தில் எழுந்தருளி கிரி பிரகாரம் உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அருளினர்.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் அதிகாலையிலேயே கடலில் புனித நீராடி காவி மற்றும் பச்சை நிற ஆடை அணிந்து கோயில் கிரி பிரகாரத்தில் அங்கப் பிரதட்சணம் செய்து விரதத்தை தொடங்கினர். பெண்கள் கிரி பிரகாரத்தில் அடிப் பிரதட்சணம் செய்தனர். விழாவின் முக்கிய நிகழ்வான சூரசம்ஹாரம் வரும் 27ம் தேதி மாலை கடற்கரையில் நடைபெறுகிறது. மறுநாள் திருக்கல்யாண வைபவம் நடைபெறுகிறது.

## பட்டியல், பழங்குடியினர் நடத்தும் நிறுவனங்களிடம் 5% பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும்: தமிழ்நாடு அரசு

சென்னை, அக்.24-

பட்டியல், பழங்குடியினர் நடத்தும் நிறுவனங்களிடம் 5% பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும். 5சதவீதம் கொள்முதல் செய்தது தொடர்பான டெண்டர் விவரங்களை 3 மாதத்திற்கு ஒருமுறை அறிக்கையாக தர வேண்டும் என அனைத்து மாவட்ட அட்சியர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு செலவீன செயலாளர் கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் இடெண்டர் மூலம் பொருட்களை கொள்முதல் செய்கின்றன.




## நெல் கொள்முதலில் அரசின் நிலைப்பாடு குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் : தமிழக பாஜக

சென்னை, அக்.24-

விவசாயம், விவசாயிகளின் நலம் காக்க, நெல் கொள்முதலில் தமிழக அரசின் நிலைப்பாடு, செயல்பாடு குறித்து தமிழக முதல்வர் ஸ்டாலின் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என தமிழக பாஜக வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "விவசாயிகளிடம் பெறப்பட்ட நெல்லில், அரிசி அரவையின் போது கலக்கப்பட வேண்டிய செறிவூட்டப்பட்ட அரிசி வழங்க, மத்திய அரசு அனுமதி அளிப்பதில் ஏற்பட்ட காலதாமதம் தான், நெல் மூட்டைகள் தேங்க காரணம் என்று வடிகட்டிய பொய்யை சொல்லி மத்திய அரசு மீது அவதூறு பிரச்சாரம் செய்யும் தமிழக உணவுத் துறை அமைச்சர் சக்கரபாணி, செறிவூட்டப்பட்ட அரிசி என்றால் என்ன? இந்தத் திட்டத்தை பாரத பிரதமர் மோடி ஏன் கொண்டு வந்தார்? எதற்காக 100 கிலோவிற்கு, 1 கிலோ செறிவூட்டப்பட்ட அரிசியினை கலக்க வேண்டும் என்று மத்திய அரசு ஏன் விதிமுறைகள் வகுத்துள்ளது? என்பதை தனது வாயால், பத்திரிகையாளர்களுக்கும் தமிழக மக்களுக்கு முதலில் விளக்க வேண்டும். இதுகுறித்து போதிய அறிவு இல்லை என்றால் , மத்திய அரசின் திட்டத்தை படித்து புரிந்து தெளிவு பெற வேண்டும்.



இந்தியாவில் அரிசி உணவாக சாப்பிடும் மக்களில், வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள குழந்தைகள், பெண்கள் மற்றும் ஆண்கள் உள்ளிட்ட பெரும்பாலானோர், வைட்டமின் பி 12, போலிக் அமிலம் , இரும்புச்சத்து உள்ளிட்ட பிற வைட்டமின் மற்றும் தாதுப் பற்றாக்குறை மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாட்டால், நோய் எதிர்ப்பு சக்திகுறைந்து, ரத்த சோகை உள்ளிட்ட பல நோய்களால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர்.

இதனைத் தடுக்க உலகளவில் பல்வேறு ஆய்வுகளால் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட உணவு செறிவூட்டல் வழிமுறையை பின்பற்றி நாட்டின் அனைத்து மக்களுக்கும் பூரண ஆரோக்கியத்துடன் வாழ்வதற்காக 'செறிவூட்டப்பட்ட அரிசி வழங்குதல்' திட்டம் மத்திய மோடி அரசால் தொலை நோக்கு சிந்தனையுடன் உருவாக்கப்பட்டு இந்தியா முழுவதும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2025 2026 ஆம் பருவத்தில் நடப்பு கொள்முதல் செய்யப்படும் நெல்லினை அரவை செய்வதற்கு தேவையான செறிவூட்டப்பட்ட அரிசியை கொள்முதல் செய்திட மத்திய அரசால் 29.07.2025 அன்றே புதிய வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டும், ஏறத்தாழ 75 நாட்கள் இரண்டரை மாதங்களுக்கு மேல் ,விவசாயிகள் மக்களின் நலனை புறக்கணித்து, தீபாவளி ரேஷன் கொள்முதல் ஊழலில் வசதியாக மறந்துவிட்டு, 07.10.2025 அன்று 34,000 மெ.டன் செறிவூட்டப்பட்ட அரிசி கொள்முதல் செய்திட தமிழக அரசு தாமதமாக பணியாணை வழங்கியது ஏன்? என்பது குறித்து அமைச்சர் சக்கரபாணி விளக்கம் அளிக்க வேண்டும்.

செறிவூட்டப்பட்ட அரிசி கலக்கப்பட்டு விடும் என, இரண்டு நாட்களுக்கு முன் மத்திய அரசிடம் விண்ணப்பித்து விட்டு, இத்தனை மாதமாக நெல் மூட்டைகள் தேங்கியதற்கு மத்திய அரசுதான் காரணம் என்று விவசாயிகளையும் மக்களையும் ஏமாற்ற பார்க்கிறார். ஆனால் தமிழகத்தில் நெல் உற்பத்தி அதிகரித்ததே, நெல் மூட்டைகள் தேக்கமடைய முழு காரணம் என அமைச்சர் எம்ஆர்கே. பன்னீர்செல்வம் , தமிழக அரசின் நிர்வாகத் திறமையின்மையை மறைத்து நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் புதிய விளக்கம் அளித்துள்ளார்.

தமிழக அரசின் தவறுகளை தட்டி கேட்டால், நிர்வாக சீர்கேடுகளை சுட்டிக் காட்டினால் அமைச்சர் சக்கரபாணி கண் மண் தெரியாமல் மோடி அரசின் மீது அவதூறு பிரச்சாரம் செய்கிறார். உண்மை தெரியாமல் எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி ஏதேதோ பேசி வருகிறார் என்று நீலிக் கண்ணீர் வடித்து மத்திய, மாநில அரசு நிர்வாகத்தின் செயல்பாடுகளை கேலிக்குரியதாக்கி, கேள்விக்குறியாக்கி , மத்திய அரசு மேல் பழியை சுமத்தி நாடகமாடுவது தான் திராவிட மாடல் அரசியலா?

மத்திய அரசின் செறிவூட்டப்பட்ட அரிசி திட்டத்தின் சிறப்பை கெடுக்கும் வகையில், உண்மையை மறைத்து சம்பந்தமில்லாமல் மத்திய அரசு அளிக்க வேண்டிய அனுமதி பற்றி அவதூறு பேசி, நெல் கொள்முதலில் தமிழக அரசின் கையாலாகாததனத்தை மறைக்கப் பார்ப்பது ஏன்?

நெல் கொள்முதலை முறையாக செய்யாமல், நெல் கிடங்குகளை பராமரிக்காமல், புதிய நெல் கிடங்குகளை அமைக்காமல், தற்காலிக பாதுகாப்பான நெல் கிடங்குகள் அல்லது சர்க்கரை ஆலை கிடங்குகள், தனியார் கிடங்குகள் என எந்த முயற்சியும் செய்யாமல் மத்திய அரசின் மீது பழி போடுவது ஏன்? தமிழக முதல்வர் ஸ்டாலின் நேர்மையுடன், தமிழக மக்கள் உண்மைகளை அறிந்து கொள்ளும் வகையில், விவசாயமும் விவசாயிகளும் காப்பாற்றப்பட, இதுகுறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

ஆணவப் படுகொலைகளுக்கு எதிரான முக்கியமான முன்னெடுப்பை திராவிட மாடல அரசு எடுத்துள்ளது என்று ட்விட்டரில் பெருமை பேசும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தமிழகத்தில் விவசாயிகள் தற்கொலை செய்வதை பற்றி கவலைப்படாமல், விவசாயிகளின் நலனுக்கு எதிராக திராவிட மாடல் அரசு செயல்படுவது குறித்து வாய் திறக்காதது ஏன்?

விவசாய சங்கங்களும் விவசாயிகளும் ஊடகங்களின் வாயிலாக நெல் கொள் முதல் நிலையங்களில், சட்டத்துக்கு புறம்பாக கமிஷன் கேட்டு மிரட்டிய அரசியல் இடைத்தரகர்களையும், நெல் கொள்முதல் நிலைய ஊழல்களையும் வெளிப்படையாக ஆதாரத்துடன் சுட்டி காட்டிய போதும், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்காதது ஏன்? என்பதை தன்னுடைய ட்விட்டரில் பதிவு செய்ய வேண்டும்.

தமிழகத்தில் நெல் கொள்முதல் முறையாக நடப்பதற்கும், தமிழக மக்களின் நலம் காக்க, ரத்த சோகை நோய் இல்லாத மாநிலமாக தமிழகம் ஆரோக்கியமாக உருவாகவும், 'செறிவூட்டப்பட்ட அரிசி' வழங்குவதற்கு மத்திய அரசு எடுத்து வரும் முயற்சிகளை பாராட்ட விட்டாலும், அவதூறு பேசாமல், செறிவூட்டப்பட்ட அரிசிக்கான தர உறுதி ஒப்புதல் மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கான முயற்சிகளை விரைந்து செய்யுங்கள். தமிழக அரசின் முயற்சிகளுக்கு பாஜக துணை நிற்கும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## மாணவி வினுத்னா ஸ்ரீ-க்கு இளம் சாதனையாளர் விருது

கோவை, அக்.24-

மாணவி T.வினுத்னா ஸ்ரீ க்கு இளம் சாதனையாளர் விருது யோகா கலையில் சிறந்து விளங்கும் கோயம்புத்தூர் அர்ஜுன் பொறியியல் கல்லூரி மூன்றாம் (AI & DS) ஆண்டு மாணவிக்கு இளம் சாதனையாளர் விருது கல்லூரியின் செயலர் உயர்திரு முனைவர் R .சுரேஷ்குமார், முதல்வர் முனைவர் நா.ஜானகி மனோகர் அவர்களின் கரங்களால் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது. மேலும் துறைத்தலைவர் முனைவர் திலகவதி, மானிடவியல் துறைத்தலைவர் வி.ராகவேந்தர், பேராசிரியர் முனைவர் K.S பாலாஜி யோகா கலை ஆசிரியர் முனைவர் அம்சவேணி, தமிழ்த்துறைப் பேராசிரியர் மு சிவசக்தி ஆகியோர் உடன் இருந்தனர்..

## திருச்சி எஸ்ஆர்எம் குழும ஹோட்டலை கையகப்படுத்திய தமிழக சுற்றுலா துறை 30 ஆண்டு குத்தகை நிறைவு

திருச்சி, அக்.24-

30 ஆண்டு குத்தகை காலம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து திருச்சியில் உள்ள எஸ்ஆர்எம் குழும ஹோட்டலை தமிழக சுற்றுலா துறை கையகப்படுத்தி உள்ளது.



திருச்சி காஜாமலை ரேஸ்கோர்ஸ் சாலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துக்கு சொந்தமான 4.74 ஏக்கர் பரப்பளவிலான இடத்தை 30 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் பெற்ற எஸ்ஆர்எம் குழுமம், அங்கு 100 அறைகள், நீச்சல் குளம், மதுக்கூடத்துடன் இணைந்த சொகுசு விடுதியை (ஹோட்டல்) 1994ம் ஆண்டு முதல் நடத்தி வந்தது.

தொடக்கத்தில் ஆண்டுக்கு ரூ.3.5 லட்சம் வீதம் குத்தகை தொகை நிர்ணயம் செய்யப்பட்டது. 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சியரால் சந்தை மதிப்பு அடிப்படையில் ஆண்டு குத்தகை தொகையை 7 சதவீதம் உயர்த்தி நிர்ணயம் செய்யவும் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

இந்நிலையில், குத்தகை காலம் 2024 ஜூன் 13ம் தேதியுடன் நிறைவடைந்ததை அடுத்து, சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில், ஹோட்டலை காலி செய்ய நோட்டீஸ் வழங்கப்பட்டது. அதற்கு 'விடுதியின் அனைத்து கட்டமைப்பு வசதிகளும் எஸ்ஆர்எம் குழுமத்தின் சார்பில் செய்யப்பட்டுள்ளது. எனவே, குத்தகை காலத்தை நீட்டிப்பு செய்ய சொல்லி பலமுறை வலியுறுத்தியும் செய்யவில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக காலி செய்ய வற்புறுத்திகின்றனர்' என்று எஸ்ஆர்எம் குழுமத்தினர் குற்றம்சாட்டினர். இதையடுத்து, ரூ.38.50 கோடி பாக்கித் தொகையை கட்ட மறுப்பதாக சுற்றுலாத் துறை சார்பில் பதில் அளிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, விடுதியை காலி செய்ய சுற்றுலாத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்ததால், உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தடையாணை பெற்ற எஸ்ஆர்எம் குழுமம், தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் முதலில் ரூ.38.50 கோடி பாக்கித் தொகையை கட்டுங்கள் என்று காலக்கெடுவுடன் உத்தரவிட்டது. ஆனால், பாக்கித் தொகை கட்டப்படவில்லை.

இந்நிலையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வர்த்தக மேலாளர் வெங்கடேசன், மண்டல மேலாளர் பிரபுதாஸ், திருச்சி கோட்டாட்சியர் அருள், கிழக்கு தாசில்தார் விக்னேஷ் மற்றும் மாநகர காவல் துறை அதிகாரிகள் நேற்று எஸ்ஆர்எம் ஹோட்டலுக்கு சென்று, அதை கையகப் படுத்தினர். ஆனால், ஹோட்டலை கையகப்படுத்தியது தொடர்பான ஆவணத்தில் கையெழுத்திட எஸ்ஆர்எம் ஹோட்டல் நிர்வாகம் தரப்பில் மறுத்துவிட்டதாக கூறப்படுகிறது.

### முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரேசன் பொருட்களை வீடு தேடி வழங்கிவரும்

## தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசுக்கு மாற்றுத்திறனாளிகள், வயது முதிர்ந்தோர் நன்றி தெரிவித்துள்ளனர்

தமிழ்நாட்டில் உள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே நேரடியாக சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர்" என்ற சிறப்பான திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.

வயது முதிர் ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் குடிமைப் பொருட்களை பெற்று எடுத்துச் செல்வதில் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர் என்பதை அறிந்து அவர்களின் வீட்டிற்கே சென்று குடிமைப் பொருட்களை வழங்கும் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.





மதுரை மாவட்டத்தில் 1389 நியாய விலை கடைகள் இருக்கிறது. இதில் 70,311 நபர்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 70 வயதிற்கு மேற்பட்டோர் உள்ளனர். நியாய விலை கடைகளை 725 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இக்குழுக்களில் உள்ள முதன்மை நியாய விலை கடைகளை தேர்வு ஒரு நியாய விலை கடைக்கு அதிகபட்சமாக 60 குடும்ப அட்டைகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் "முதலமைச்சரின் தாயுமானவர்" திட்டதின் கீழ் பயன்பெறும் 70 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு நேரடியாக சென்று நியாய விலை கடை அலுவலர்கள் அவர்களின் முன்னிலையில் மின்னனு தராசின் மூலம் எடையிட்டு குடிமைப் பொருட்களை வழங்கி வருகிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த ஜெயப்பிரியா அவர்கள் தெரிவிக்கையில்:

நடக்கமுடியாமல் படுத்த நிலையில் இருக்கும் மாற்றுத்திறனாளியான எனக்கு எனது தந்தை தான் இதுநாள் வரை ரேஷன் கடைக்கு சென்று பொருட்களை வாங்கி வந்தார். தற்போது தாயுமானவர் திட்டம் அமலான பிறகு ரேஷன்கடை ஊழியர் வீட்டிற்கே வந்து பயோமெட்ரிக் இயந்திரத்தில் கைரேகை பதிவு செய்து அரிசி, பருப்பு, பாமாயில், சீனி உள்ளிட்ட பொருட் களை வழங்கி வருகிறார். முன்னர் ரேஷன் கடைகளில் அனைத்து பொருட்களையும் ஒரே நாளில் வாங்க முடியாது. வெவ்வேறு நாட்களுக்கு சென்று வாங்கும் நிலை இருந்தது. தற்போது தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களின் கருணையான நடவடிக்கையால் எங்கள் குடும்பத்திற்கு தேவையான ரேஷன்பொ ருட்கள் எங்க ளது வீடு தேடி வருகிறது. எங்களைப் போன் றவர்களை மட்டுமின்றி. மூத்த குடிமக்களின் நலனையும் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் இத்திட்டத்தில் சேர்த்தது, மூத்த குடிமக்களுக்கு வரப்பிர சாதமாக அமைந்துள்ளது. இதனால் எங்கள் சிரமம் குறைந்துள்ளது. ரேஷன் கடைக்கு அலைச்சல் இன்றி வீட்டில் இருந் தபடியே வயி றாற சாப்பிட முடிகிறது. எங்களை மதித்து இப்படிப் பட்ட உன்னதமான திட்டத்தை தந்த முதல்வருக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**

### நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 25.10.2025 அன்று கடமலைக்குண்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் உயர் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது

தேனி, அக்.24-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக பொதுமக்கள் பயனடையும் வகையில் தமிழ்நாடு முழுவதும் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் சிறப்பு மருத்துவ முகாமினை கடந்த 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள். இம்மருத்துவ முகாம்கள் தேனி மாவட்டத்தில் வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் 24 முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 11 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவையின் 12ஆவது முகாம், க.மயிலாடும்பாறை வட்டாரம், கடமலைக்குண்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் 25.10.2025 அன்று காலை 09.00 மணி முதல் மாலை 04.00 வரை நடைபெறவுள்ளது. இம்முகாம்களில் அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் ஆரோக்கியப் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம். நீரிழிவு நோய், மின் இதய வரைபடம். எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், எக்ஸ் ரே முதலியவை) காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் ஆரம்ப கட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும். மேலும் 15 துறைகளைச் சார்ந்த மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளும் (பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, இதயவியல் உள்ளிட்ட துறைகள்) வழங்கப்படுகிறது. மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமின்றி தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகிறது. எனவே. மருத்துவ பரிசோதனை தேவைப்படுவோர் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

## பள்ளியில் 38 ஆண்டு மணி அடித்த ஊழியருக்கு பிரியாவிடை

பெங்களூரு, அக்.24-

பெங்களூருவில் உள்ள பிஷப் காட்டன் பெண்கள் பள்ளி 100 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறது. தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இந்தப் பள்ளியில் தனது தொடக்க கல்வியை பயின்றது குறிப்பிடத்தக்கது.



இந்தப் பள்ளியில் தாஸ் (60) என்பவர் கடந்த 38 ஆண்டுகளாக மணி அடிக்கும் ஊழியராக பணியாற்றி வந்தார். எலக்ட்ரிக் மணி அறிமுகமான பிறகும் இந்தப் பள்ளியில், பழைய மணி அடிக்கும் முறையே தொடர்ந்தது. மணி அடிக்கும் ஊழியரான தாஸ் நேரத்தை துல்லியமாகப் பார்த்து, 38 ஆண்டுகளும் நேர்த்தியாக தனது பணியை செய்து வந்தார்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அவரது கடைசி பணி நாளின் போது மாலை 4 மணிக்கு கடைசியாக மணி அடித்தார். அப்போது பள்ளியின் அனைத்து மாணவிகளும் ஆசிரியர்களும் அவரை சூழ்ந்தவாறு நின்று உற்சாகமாக கரவொலி எழுப்பி ஆரவாரம் செய்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி வைரலாகியுள்ளது.

இதனை அமி குட்டி என்ற முன்னாள் மாணவி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். அதில், ''தாஸ் அங்கிள் கடந்த 38 ஆண்டுகளாக பள்ளியில் மணி அடித்து வந்தார். ஒவ்வொரு நாள் காலையும் அவர் மணி அடிக்கும்போது எங்கள் அனைவரின் வகுப்புகளும் தொடங்கும். மாலையில் மணி அடிக்கும் போது உற்சாகமாக பள்ளியை விட்டு வெளியே வருவோம்.

தாஸ் அங்கிள் கடைசியாக மணியை அடித்த போது கண்கள் கலங்கி விட்டன'' என குறிப்பிட்டார். இந்த வீடியோவை சுமார் 4 கோடி பேர் பார்த்த நிலையில், லட்சக்கணக்கானோர் பகிர்ந்துள்ளனர்.

## பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் மதுரை மாவட்டத்தில், சிறுபான்மையினர் நலன் குறித்த கோரிக்கைகள் சிறுபான்மையினர் நலத்திட்டங்கள் செயலாக்கம் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது

மதுரை, அக்.24-

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் மதுரை மாவட்டத்தில், சிறுபான்மையினர் நலன் குறித்த கோரிக்கைகள் சிறுபான்மையினர் நலத்திட்டங்கள் செயலாக்கம் தொடர்பாக ஆய்வுக் கூட்டம் இன்று (23.10.2025) தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. சி. பெர்னான்டஸ் ரத்தின ராஜா அவர்கள், தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்திட்ட சிறப்புக் குழுவின் உறுப்பினர்/ திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.த.இனிகோ இருதயராஜ் அவர்கள் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் திரு. சி. பெர்னான்டஸ் ரத்தின ராஜா அவர்கள், தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்திட்ட சிறப்புக் குழுவின் உறுப்பினர்/திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.த.இனிகோ இருதயராஜ் அவர்கள் ஆகியோர் தெரிவிக்கையில்,

சமத்துவ நாயகர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் சிறுபான்மையினர் நல மக்களுக்கு செய்யப்பட்டு வருகின்ற திட்டங்கள் உரிய முறையில் கிடைக்கப்பெறுகிறதா என்பதை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும், எந்த இடத்தில் தொய்வு இருக்கிறது என்பதை அறிந்து அதனை எப்படி சரி செய்ய வேண்டும் என்பதற்கான அறிக்கைகளை தயார் செய்து கொடுப்பதற்காக தமிழ்நாடு அரசால் முதன் முதலாக தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்திட்ட சிறப்பு குழு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கபரஸ்தான் மற்றும் கல்லறை தோட்டம் என்பது சிறுபான்மையினரின் மக்களின் நம்பிக்கை சார்ந்த விஷயம் ஆகும். கபஸ்தலம் மற்றும் கல்லறை அமைப்பதற்கு அவர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது.

ஒவ்வொரு பகுதிக்கும் தனித்தனியாக இல்லை என்றாலும் ஒரு தாலுகா அளவில் கபரஸ்தான் மற்றும் கல்லறை தோட்டம் என்பது ஏற்பாடு செய்து தர வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கபரஸ்தான் மற்றும் கல்லறை தோட்டம் என்பது சம்பந்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளை விரைவாக பரிசீலனை செய்து மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். கல்லறைகளில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கும், பாதைகள் அமைப்பதற்கும் மற்றும் விளக்குகள் போடுவதற்கும் மக்கள் சார்பில் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. அந்த மனுக்கள் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் உபதேசியார் நல வாரியம் என்பது ஆலயங்களில் பணி செய்கின்ற ஆலய பணியாளர்களின் எதிர்கால வாழ்க்கை சம்பந்தப்பட்டது. மதுரை நகரில் மட்டும் ஏறக்குறைய 300 முதல் 400 ஆலயங்கள் உள்ளது. ஆலய பணியாளர்களை இத்திட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும். கிறிஸ்துவ ஆதிதிராவிட மக்கள் தங்கள் பிள்ளைகளை அயல்நாடு அனுப்பி மேல் படிப்பு படிக்க வைப்பதற்கு ரூ.30 இலட்சத்திற்கும் மேலாக கடனுதவி தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. பின்னர் அந்த கடனுதவியும் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. கடந்த மாதத்தில் தமிழ்நாடு அரசு முஸ்லீம் சகோதர, சகோதரிகள் அயல் நாட்டிற்கு சென்று படிப்பதற்கு முதல் பத்து பேருக்கு 30 இலட்சம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்துள்ளது. இதனை நாம் பயன்படுத்த வேண்டும். இது தொடர்பான அறிக்கைகளை ஆலயத்தில் அறிவிப்பு பலகைகளில் ஒட்ட வேண்டும். மேலும் அவர்கள் தனி தொழில் செய்வதற்கு ஊக்கப் படுத்தப்பட வேண்டும். கிருத்துவ தேவாலயங்களை பழுது பார்த்தல் மற்றும் புனரமைத்தல் பணி மேற்கொள்ள தேவாலய கட்டடத்தின் வயது ஆகியவற்றை கருத்தில் கொண்டு 10 முதல் 15 வருடம் வரை ரூபாய் 10 லட்சம், 15 முதல் 20 வருடம் வரை ரூபாய் 15 லட்சமும், 20 வருடங்களுக்கு மேல் இருப்பின் ரூபாய் இருவது லட்சமும் தமிழ்நாடு அரசு மானிய தொகையாக வழங்குகிறது. மேலும் சிறுபான்மையினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பொதுமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு அலுவலர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில்,

மதுரை மாவட்டத்தில் சிறுபான்மையினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. மதுரை மாவட்டத்தில் மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் 1 மூலம் 2024 முதல் தற்போது வரை 304 பயனாளிகளுக்கு சிறு தொழில்,கல்வி உதவித்தொகை மருத்துவ உதவி தொகை என ரூபாய் 45.60 லட்சம் மதிப்பிலும், மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் 2 மூலம் 2024 முதல் தற்போது வரை 100 பயனாளிகளுக்கு சிறு தொழில்,கல்வி உதவித்தொகை மருத்துவ உதவி தொகை ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் 1 மூலம் 2024 முதல் தற்போது வரை 158 பயனாளிகளுக்கு சிறு தொழில்,கல்வி உதவித்தொகை மருத்துவ உதவி தொகை என ரூபாய் 23.70 லட்சம் மதிப்பிலும், மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் 2 மூலம் 2024 முதல் தற்போது வரை 156 பயனாளிகளுக்கு சிறு தொழில்,கல்வி உதவித்தொகை மருத்துவ உதவி தொகை என ரூபாய் 23.4 லட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் 532 உறுப்பினர்கள் பதிவு செய்துள்ளனர். இதில் பதிவு பெற்ற7 பயனாளிகளுக்கு இரு சக்கரம் வாங்க மானியம், 304 விலையில்லா மிதிவண்டிகள், 10 பயனாளிகளுக்கு முதியோர் ஓய்வூதியம், 9 பயனாளிகளுக்குகல்வி உதவித் தொகை போன்றவை வழங்கப்பட்டுள்ளன. கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் மதுரை மாவட்டத்தில் இதுவரை 76 உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கும் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், புத்த மதத்தினர், சீக்கியர்கள், பார்ஸியர்கள் மற்றும் ஜெயின் பிரிவை சார்ந்த மத வழி சிறுபான்மையின மக்கள் சுய தொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் கடன் வழங்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் 2023 முதல் தற்போது வரை 335 பயனாளிகளுக்கு ரூபாய் 261.97 லட்சம் மதிப்பீட்டில் சிறுபான்மையின மக்கள் சுய தொழில் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு உபதேசியார் வாரிய உறுப்பினர்கள் திரு.ஜெயப்பிரகாஷ் அவர்கள், திரு.பிரபாகர் அவர்கள். மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அன்பழகன் அவர்கள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு.சண்முக வடிவேல் அவர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# தேனி மாவட்டம்: உரிமை கோரப்படாத வைப்புத் தொகை தீர்வு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது

தேனி, அக்.24-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம் மற்றும் முன்னோடி வங்கி சார்பில் உரிமை கோரப்படாத வைப்புத் தொகை (Unclaimed Fund) தீர்வு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

இந்திய அரசின் நிதி சேவைகள் துறையின் மூலம் தொடங்கப்பட்டுள்ள "உங்கள் பணம், உங்கள் உரிமை" (Your Money, Your Rights) திட்டத்தின் ஒரு பகுதியாக, உரிமை கோரப்படாத வைப்புத் தொகை (Unclaimed Fund) தீர்வு முகாம் நடத்தப்படுகிறது. இதன்மூலம் பொதுமக்கள் தங்களது வங்கிகளில் உள்ள உரிமைகோரப்படாத வைப்புத்தொகைகளுக்கு (Unclaimed Fund) தீர்வு காணலாம். இம்மு காமில், வங்கி நிறுவனங்களின் சார்பில் படிவங்கள் நிரப்புதல், ஆவணங்கள் சரிபார்த்தல் உள்ளிட்ட பல்வேறு வழிகாட்டுதல்களும் வழங்கப்பட உள்ளது.

எனவே, வங்கிகள் / நிதி சார் நிறுவனங்களிலிருந்து சம்பந்தப்பட்ட வைப்புத் தொகையாளர்கள் (அல்லது) இறந்த வைப்புத் தொகையாளர்களின் சட்டப்பூர்வ வாரிசுகள் (அல்லது) இறந்த வைப்புத் தொகையாளர்களின் பரிந்துரைக்கப்பட்டவர்கள் (Nominee) சரியான ஆதாரங்களை சமர்ப்பித்து உரிமைக் கோரப்படாத தொகையினை வட்டியுடன் திரும்பப்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முகாம் குறித்து தெரிந்தவர்கள் தங்கள் நண்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இம்முகாமில் பங்கேற்கும், பொதுமக்கள் தங்களது அடையாள அட்டைகள் ஆதார், பான், பாஸ்புக், சட்ட வாரிசுகளாக இருப்பின் இறப்புச் சான்றிதழ் மற்றும் வாரிசு சான்று உள்ளிட்ட ஆவணங்களுடன் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். மேலும், இம்முகாம் வட்டாரம் வாரியாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 2410 2025 அன்று பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், 27102025 அன்று ஆண்டிப்பட்டி மகளிர் திட்டம் கட்டிட வளாகத்திலும் (சக்கம்பட்டி, சீதாலட்சுமி பெட்ரோல் நிலையம் எதிர்புறம்), 28 10 2025 அன்று மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், சின்னமனூர் மற்றும் உத்தமபாளையம் வட்டாரங்களுக்கு 29.10. 2025 அன்று சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், 30.10.2025 அன்று போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும், 31.10.2025 அன்று கம்பம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலும் முகாம் நடைபெற உள்ளது. இதனை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இம்முகாமில் முன்னோடி வங்கி மேலாளர். கார்த்திகேயன், மண்டல மேலாளர் .விஜயசேகர் மற்றும் அனைத்து வங்கி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பல்வேறு நகரங்களில் இருந்து சென்னைக்கு 2,900 சிறப்பு பேருந்துகள்

சென்னை, அக்.24-

தீபாவளி பண்டிகைக்காக சென்னையில் வசிக்கும் வெளியூர் மக்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கு சென்றனர். பண்டிகை முடிந்து அவர் மீண்டும் சென்னை திரும்ப நேற்று முன்தினம் முதல் தமிழக போக்குவரத்து துறை சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பல்வேறு ஊர்களில் இருந்து சென்னைக்கு தினமும் 2,092 பேருந்துகள் இயக்கப்படும். அதனுடன் கூடுதலாக நேற்று முன்தினம் 2,048 பேருந்துகளும், நேற்று 2,392 பேருந்துகளும் இயக்கப்பட்டன.



பல்வேறு ஊர்களில் இருந்து கோவை, திருச்சி, மதுரை போன்ற பிற முக்கிய நகரங்களுக்கு நேற்று முன்தினம் 2,245 பேருந்துகளும், நேற்று 1,485 பேருந்துகளும் இயக்கப்பட்டன.

பெரும்பாலான மக்கள் கடந்த 2 நாட்களிலேயே சென்னை திரும்பி இருப்பார்கள் என்பதால் இன்று கூடுதலாக 813 பேருந்துகள் மட்டுமே இயக்கப்படுகிறது. வழக்கமாக இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 813 பேருந்துகள் என மொத்தம் 2,905 பேருந்துகள் இன்று இயக்கப்படுகின்றன. பிற முக்கிய நகரங்களுக்கு இன்று 870 பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

# தமிழ்நாடு முதலமைச்சருக்கு இராமநாதபுரம் விவசாயிகள் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்தனர்

இராமநாதபுரம், அக்.24-

வேளாண்மை உழவர் நலத்துறையின் மூலம் விவசாயப் பெருமக்களின் வாழ்வில் ஏற்றம் காணும் வகையில் மானியத்துடன் கூடிய பல்வேறு திட்டங்கள் தமிழ்நாடு அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மண்ணுயிர் காப்போம் திட்டம், கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், பருத்தி உற்பத்தி பெருக்க திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்க திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றிடும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநில வேளாண் வளர்ச்சி திட்டமானது வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் கோடை உழவு செய்யும் விவசாயிகளுக்கு பின்னேற்பு மானியமாக ரூ.800 வீதம் ஏக்கருக்கு வழங்கப்படுகின்றது. நடப்பாண்டு 2025-2026ல் இருபதாயிரம் ஏக்கர் கோடை உழவு செய்திட இலக்கு பெறப்பட்டு சாதனை எய்தப்பட்டுள்ளது.




இத்திட்டத்தின் பயன்பெற மானாவரி சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் தகுதியுடையவர்கள். ஒரு விவசாயி அதிகபட்சமாக 5 ஏக்கர் வரை கோடை உழவு பயனை பெறலாம். உழவர் செயலி மற்றும் அக்ரிஸ்நெட் வளைதளத்தில் பதிவு செய்த பயனாளிகளின் மூப்புரிமை அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.

இத்திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் வட்டாரத்தில் 1180 ஏக்கர், திருப்புல்லாணி 840 ஏக்கர், உச்சிப்புளி 270 ஏக்கர், திருவாடானை 2772 ஏக்கர், ஆர்.எஸ். மங்கலம் 2580 ஏக்கர், பரமக்குடி 1000ஏக்கர், நயினார்கோவில் 1645 ஏக்கர், போகலூர் 1105 ஏக்கர், கமுதி 2580 ஏக்கர், முதுகுளத்தூர் 3090 ஏக்கர் மற்றும் கடலாடி 2938 ஏக்கர் பரப்பிற்கு 100 சதவீதம் மானியத்தில் மாநில வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் மூலம் நடப்பாண்டில் 5600 பயனாளிகள் கோடை உழவு மானியம் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

மாநில வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின் கீழ் கோடை உழவு மானியம் பெற்ற விவசாயி தெரிவிக்கையில்,

என்னுடைய பெயர் சுப்பிரமணியன். நான் இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோயில் வட்டாரம், தாளயடிக்கோட்டை கிராமத்தில் வசித்து வருகின்றேன். நான் 5 ஏக்கர் நிலத்தில் சம்பா பருவத்தில் நெற்பயிரிடுவது வழக்கம். இந்த வருடம் கோடைப்பருவத்தில் கோடை உழவு செய்திட மானியம் கிடைத்ததில் 5 ஏக்கர் பரப்பிற்கு கோடை உழவு செய்து ரூ.4000ஃ மானியம் பெற்றுள்ளேன். நான் இப்பொழுது கோடை உழவு செய்த நிலத்தில் நெல் விதைக்கப்பட்டு நல்ல முறையிலே நெற்பயிர்களில் பூச்சிகள் நோய்கள் இல்லாமல் வளர்வதை கண்கூடாக பார்க்க முடிகின்றது.

மேலும் விதைப்பிற்கு முன்னர் உழவு பணியும் சுலபமாக இருந்தது. இதனால் உற்பத்தி செலவு குறைந்து பூச்சி நோய்களின் தாக்குதல் குறைந்து அதிக மகசூல் பெற வழிவகை செய்யும் மாநில வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தின்கீழ் கோடை உழவு மானியம் அறிவித்து என்னைப் போன்ற கடைக்கோடி விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயலாற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பிலும் என்னைப் போன்ற விவசாயிகள் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

# நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 25.10.2025 அன்று நடைபெற உள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தகவல்

தென்காசி, அக்.24-

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் வட்டாரம் வாசுதேவநல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 25.10.2025 (சனிக்கிழமை) காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற உள்ளது. இம்முகாமில் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல், மகப்பேறு மற்றும் மகளிர் நலம், குழந்தைகள் நலம், இருதயவியல், நரம்பியல், தோல், பல், கண், காது, மூக்கு, தொண்டை, மனநலம், இயன்முறை, நுரையீரல் மற்றும் இந்திய முறை மருத்துவம் ஆகிய அனைத்து வகையிலும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. மேலும், மாற்றுத் திறனாளிகளுக்கான சான்றிதழ், முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு அட்டை போன்ற அனைத்து சேவைகளும் தகுதியுள்ளவர்களுக்கு ஒரே இடத்தில் கிடைக்கும் விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைவரும் முகாமிற்கு வருகை தந்து மருத்துவப் பரிசோதனை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், தெரிவித்துள்ளார்.

# அக்டோபர் மாதத்தில் தினசரி யுபிஐ பரிவர்த்தனை ரூ.94 ஆயிரம் கோடியாக உயர்வு

புதுடெல்லி, அக்.24-

தீபாவளி பண்டிகை காரணமாக நடப்பு அக்டோபர் மாதத்தில் அதிகபட்சமாக ஒரே நாளில் யுபிஐ பரிவர்த்தனை எண்ணிக்கை 74 கோடியைத் தாண்டி உள்ளது. இதுபோல, அதிகபட்சமாக தினசரி யுபிஐ பரிவர்த்தனை மதிப்பு இதுவரை 6 முறை ரூ.1 லட்சம் கோடியைத் தாண்டி உள்ளது. அதேநேரம் சராசரி தினசரி யுபிஐ பணப் பரிவர்த்தனையின் மதிப்பு இதுவரை இல்லாத வகையில் ரூ.94 ஆயிரம் கோடியாக அதிகரித்து புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. இது கடந்த செப்டம்பர் மாதத்தைவிட 13% அதிகம். யுபிஐ பரிவர்த்தனையை நிர்வகிக்கும் இந்திய தேசிய பணப்பட்டுவாடா கழக (என்பிசிஐ) புள்ளிவிவரத்தின் மூலம் இது தெரியவந்துள்ளது. இந்த மாதத்தின் முடிவில் யுபிஐ பரிவர்த்தனை ரூ.28 லட்சம் கோடியைத் தாண்டி புதிய சாதனை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை ஒரு மாத அதிகபட்ச யுபிஐ பரிவர்த்தனை ரூ.25 லட்சம் கோடியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# நாகை கொள்முதல் நிலையங்களில் தேங்கிய நெல் மூட்டைகளை இயக்கம் செய்யும் பணி தீவிரம்

நாகை, அக்.24-

நாகை மாவட்டத்தில் கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகளை சேமிப்புக் கிடங்குக்கு இயக்கம் செய்யும் பணி தொடங்கி தீவிரம் நடைபெற்று வருகிறது.



நாகை மாவட்டத்தில் கடந்த ஆண்டு 5,000 ஏக்கரில் மட்டும் குறுவை சாகுபடி செய்யப்பட்ட நிலையில், நிகழாண்டு மேட்டூரில் இருந்து உரிய காலத்தில் (ஜூன் 12) தண்ணீர் திறக்கப்பட்டதால், 1.10 லட்சம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு, தற்போது அறுவடை பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

மாவட்டத்தில் மொத்தம் 124 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் நாளொன்றுக்கு ஆயிரம் நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. ஆனாலும், அதிக விளைச்சல் காரணமாக விவசாயிகள் கொண்டுவந்த நெல் மூட்டைகள் தேக்கமடைந்துள்ளன.

இந்நிலையில், தீபாவளி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் லாரிகள் மூலம் இயக்கம் செய்யப்படாததால், கொள்முதல் நிலையங்களில் அதிகளவில் நெல் மூட்டைகள் தேங்கியுள்ளன. இவை மழையில் நனைந்து முளைவிடத் தொடங்கியுள்ளன.

மேலும், கொள்முதல் நிலையத்தில் மூட்டைகள் தேக்கம் அடைந்ததால், மேற்கொண்டு கொள்முதல் நடைபெறுவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் அறுவடை செய்த நெல் மூட்டைகளுடன் 10 நாட்களுக்கு மேலாக காத்திருப்பதாகவும், அந்த நெல்மணிகள் மழையில் நனைந்து முளைவிட்டு சேதமடைந்து வருவதாகவும் விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட வயல்கள் மற்றும் நெல் கொள்முதல் நிலையங்களை எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி நேற்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இதற்கிடையே, மாவட்ட நிர்வாகம் உடனடியாக நெல் கொள்முதல் நிலையங்களுக்கு லாரிகளை அனுப்பி, நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்லும் பணி தொடங்கி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்த பணிகள் குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது: நெல் கொள்முதல் நிலையங்களில் இத்தனை நாட்களாக நெல் மூட்டைகளை இயக்கம் செய்யாமல், எதிர்க்கட்சித் தலைவர் வருகிறார் என்றதும் அவசர அவசரமாக இயக்கம் செய்யும் பணியில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்து முளைவிட்டிருக்கும் நிலையில், அவற்றை வேறு சாக்குகளுக்கு மாற்றி ஏற்றிச் செல்கின்றனர். அதேபோல், நெல் மூட்டைகளை உடனுக்குடன் கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர்.

# மழை, மெத்தனம், துயரம்... கால் நூற்றாண்டாக விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் தத்தளிப்பு

விழுப்புரம், அக்.24-

விழுப்புரத்தின் பிரதான ஏரிகளில் ஒன்றாக பூந்தோட்டம் ஏரி திகழ்ந்தது. 118.54 ஏக்கர் பரப்பளவை கொண்டிருந்தது. இந்த ஏரிக்கு தென்பெண்ணையாற்றில் இருந்து கோலியனூரான் பாசன கால்வாய் வழியாக நீர் வரத்து இருந்தது.

28 ஆண்டுகளுக்கு முன்பு, திமுக ஆட்சியில் ஏற்பட்ட மழை வெள்ளத்தில், பூந்தோட்டம் ஏரி நிரம்பி, தண்ணீர் வெளியேறியது. இதனால், சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. ஆனாலும், நீர்வரத்து இல்லாத ஏரி இது என முடிவு செய்து, ஆட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுலவகங்கள், அரசு ஊழியர்களுக்கான குடியிருப்புகளைக் கொண்ட பெருந்திட்ட வளாகம் மற்றும் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க திட்டமிட்டு தமிழக அரசு இந்த பூந்தோட்ட ஏரியை கையகப்படுத்தியது.

பூந்தோட்டம் ஏரி நிரம்பி வழிந்த சுமார் 3 ஆண்டுகளில், அந்த ஏரி அழிக்கப்பட்டு, அப்பகுதியில் பெருந்திட்ட வளாகம் உருவானது. ஆட்சியர் அலுவலகம், மாவட்ட காவல் அலுவலகம், நீதிமன்றம் உட்பட பல்வேறு அரசு அலுவலகங்களுடன் புதிய பேருந்து நிலையமும் உருவானது. இதனை, அப்போதைய முதல்வர் மு.கருணாநிதி கடந்த 09 062000 அன்று திறந்து வைத்தார்.

திறக்கப்பட்ட கால் நூற்றாண்டு காலத்தை கடந்த போதும், ஒரு மணி நேரம் பெய்யும் மழைக்கு கூட தாக்குபிடிக்க முடியாமல் புதிய பேருந்து நிலையம் திணறுகிறது.




இயற்கையின் பாதையை அழித்ததால், தனது இருப்பிடத்தை தேடி வந்து தஞ்சமடைகிறது மழை நீர்.

விழுப்புரத்தில் நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் புதிய பேருந்து நிலையம் வழக்கம்போல் தத்தளித்தது. பேருந்து நிலையத்தை ஒட்டியிருக்கும் ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் தண்ணீர் தேங்கி விடக்கூடாது என்பதற்காக அனைத்து நீர் வழி பாதையில் தண்ணீர் வெளியேற்றப்பட்டதால், புதிய பேருந்து நிலையத்துக்கு நெருக்கடி ஏற்பட்டது. பேருந்துகள் நீச்சலடித்து வெளியேறின.

மழைநீருடன், பேருந்து நிலையத்தில் உள்ள கழிவுநீரும் கலந்ததால் துர்நாற்றம் வீசி, சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தியது. இதனால், பேருந்து நிலையம் உள்ளே செல்ல மக்கள் முன்வரவில்லை. நுழைவு வாயிலில் காத்திருந்து, வெளியே வந்த பேருந்துகளில் ஏறி பயணித்தனர். இதன் காரணமாக, நேற்று காலை 11 மணி வரை நுழைவு வாயிலில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்தது. அதன்பிறகே போலீஸார் வந்து போக்கு வரத்தை சரி செய்தனர்.

இது குறித்து நகர மக்களும், பயணிகளும் கூறும்போது, "பூந்தோட்ட ஏரியை அழித்து பேருந்து நிலையத்தை கொண்டு வந்து, எங்களை கஷ்டப்படுத்து கின்றனர். 'திமுக ஆட்சியில் ஒரு குடையின் கீழ் பெருந்திட்ட வளாகம் கொண்டு வரப்பட்டது' என முன்னாள் அமைச்சர் பொன்முடி பெருமையுடன் பேசி வருகிறார். ஆனால், ஏரியில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற, அவருக்கு வழி தெரியவில்லை. அவரது கட்சியை சேர்ந்த தற்போதைய எம்எல்ஏ லட்சுமணனும், மழைநீர் தேங்கிய புதிய பேருந்து நிலையத்தை பார்வையிடுவதுடன் தனது கடமையை முடித்து கொள்கிறார். ஆய்வு பணியுடன் ஆட்சியர்களும், கடந்து விடுகின்றனர்.

திமுக 10 ஆண்டுகளும், அதிமுக 15 ஆண்டுகளும் ஆட்சி செய்து விட்டது. விடியல் பிறக்கவில்லை. பேருந்து நிலையத்தில் தேங்கி கிடக்கும் மழை நீரை வெளியேற்று கிறோம் என்ற பெயரில், மக்களின் வரி பணத்தில் பல கோடி ரூபாயை ஆட்சியாளர்கள் விரயமாக்கி விட்டனர். நிரந்தர தீர்வு எட்டவில்லை.

மழை நீருடன் கலந்த கழிவுநீரில் தத்தளித்து நடந்து செல்வது பயணிகளுக்கு கொடுமையான ஒன்றாக இருக்கிறது. ஃபெஞ்சல் புயலில் ஒரு வாரத்துக்கு பேருந்து நிலையம் முடங்கியது. அதன்பிறகும் அதிகாரிகள் பழைய வழி பாதையை தேட முன்வரவில்லை. பூந்தோட்ட ஏரியில் இருந்து மருதூர் ஏரியை நோக்கி வெளியேறும் பாசன கால்வாய்கள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீட்டெடுத்தால் மட்டுமே தீர்வு காண முடியும்" என்று தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து ஆட்சியர் ஷேக் அப்துல் ரஹ்மான் கூறும்போது, "புதிய பேருந்து நிலையத்தில் மழைநீர் தேங்கி இருப்பதை நேரில் ஆய்வு செய்துள்ளேன். ஒரே நாளில் 17 செ.மீ மழை பெய்துள்ளதால், தண்ணீர் தேங்கி இருக்கிறது. 100 குதிரை திறன் மோட்டார் மூலமாக தண்ணீரை வெளியேற்றும் பணி நடைபெறுகிறது. மேலும் ஒரு மோட்டாரை வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மழையின் தாக்கமும் குறைந்துள்ளது. விரைவாக தண்ணீர் வெளியேற்றப்பட்டுவிடும்" என்றார். மழை பொழிவு குறைந்ததால், புதிய பேருந்து நிலையம் நேற்று மாலை சற்று இயல்பு நிலைக்கு திரும்பியது.



## கூட்டுறவு சங்க புதிய கட்டடம் கட்டுவதற்கான இடத்தை முதன்மை அமைப்பாளர் ஏஆர். ஜெயமூர்த்தி ஆய்வு

சிவகங்கை, அக்.24-

சிவகங்கை மாவட்டம், பெரிய கோட்டை குரூப் ஆர். எஸ். 861 வழுதனி தொடக்க வேளான்மை கூட்டுறவு சங்கம் பெரியகோட்டை கிராமத்தில் செயல்பட்டு வருகிறது.

இந்த சங்கத்திற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கான இடத்தை சரக துணைப்பதிவாளர் முன்னிலையில் சங்கத்தின் முதன்மை அமைப்பாளர், திமுக தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அறங்காவர் ஏஆர். ஜெயமூர்த்தி மற்றும் கிராமத் தலைவர் உள்ளிட்ட கிராமப் பெரியோர்களுடன் சேர்ந்து ஆய்வு மேற்கொண்டனர்...



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சிறுபான்மையினர் நலன் குறித்த கோரிக்கைகள், சிறுபான்மையினர் நலத்திட்டங்கள் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதாரா மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் சி.பெர்னான்டஸ் ரத்தின ராஜா, தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்திட்ட சிறப்புக் குழு உறுப்பினர் மற்றும் திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் முனைவர்.த.இனிகோ இருதயராஜ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் தமிழ்நாடு உபதேசியார் வாரிய உறுப்பினர் ஜெயப்பிரகாஷ் பிரபாகர் ஆகியோர் உடன் உள்ளனர்.



### மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறை பணியாளர்களுக்கான சமூக அடிப்படையிலான

## அவசரகால முதன்மை பொறுப்பாளர்களுக்கான பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தொடங்கி வைத்தார்

கடலூர், அக்.24-

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறை பணியாளர்களுக்கான சமூக அடிப்படையிலான அவசரகால முதன்மை பொறுப்பாளர்களுக்கான பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவிக்கையில்,

பேரிடர், மழைவெள்ள பாதிப்புகள் ஏற்படும் பொழுது முதல்நிலை தகவல் அளிப்பதற்காகவும், பொதுமக்களை மீட்பதற்கும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, மருத்துவத் துறை, காவல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் மூலம் முதல்நிலை தகவல் அளிப்பவர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு தயார்நிலையில் உள்ளனர்.

தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் கடலோர பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களின் சமுதாய நலன் உதவிகளை வழங்கிட நடத்தப்படும் சமூக அடிப்படையிலான அவசர காலம் மற்றும் முதன்மை பொறுப்பாளர்கள் பயிற்சியில் மீனவர்கள் மற்றும் மீன் வளத்துறை பணியாளர்கள் என மொத்தம் 400 நபர்கள் கண்டறியப்பட்டு பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சி இரண்டு நாட்கள் நடைபெறுகிறது. இன்றைய தினம் 200 நபர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலம் மாவட்ட பேரிடர் மேலாண்மை துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு துறை, மருத்துவ துறை, கடலோர பாதுகாப்பு குழுமம் மற்றும் கடற் பாதுகாப்பு படை போன்ற துறைகளின் ஒருங்கிணைப்புடன் நடைபெறுகிறது. இப்பயிற்சியில் மீனவர்கள் தங்களுக்கு மீன்பிடிப்பில் ஏற்படும் அசாதாரண சூழலை திறம்பட கையாள்வதற்கும் மீட்பு பணியினை சிறப்பாக மேற்கொள்ள உதவுவதோடும் தங்களது சமூகத்திற்கும் புயல் வெள்ள பேரிடர் மீட்பு பணிகளில் முக்கிய பங்காற்றவும் வழிவகுக்கும். எனவே, அரசின் வாயிலாக வழங்கப்படும் இப்பயிற்சியினை மீனவர்கள் மற்றும் மீன்வளத்துறை பணியாளர்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிபி ஆதித்யா செந்தில்குமார் இ.ஆ.ப., தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் மீனவளத்துறை நித்தியபிரியதர்ஷினி, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மாவட்ட அலுவலர் விஜயகுமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள், மீனவர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமானது,

## வருகின்ற 25.10.2025 அன்று புதுவயல், ஸ்ரீ வித்யாகிரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி மற்றும் வித்யாகிரி கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது: மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, அக்.24-

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 2.8.2025 அன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் புதிய திட்டத்தினை தொடங்கி வைத்துள்ளார்கள்.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகம் முழுவதும் சுமார் 1,256 உயர்தர மருத்துவ மையங்கள் மூலம் 17 சிறப்பு மருத்துவ துறைகள் வாயிலாக கட்டணமில்லா மருத்துவ சேவைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, சிவகங்கை மாவட்டத்தில், வாரத்திற்கு ஒரு முகாம் வீதம் மொத்தம் 39 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.





அதனடிப்படையில், வருகின்ற 25.10.2025 ஆம் தேதியன்று புதுவயல், வீரசேகரபுரம், ஸ்ரீ வித்யா கிரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி மற்றும் வித்யா கிரி கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமானது நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமில், ரூபாய் 3 ஆயிரம் மதிப்பீட்டிலான இரத்த பரிசோதனை, இ.சி.ஜி உள்ளிட்ட பல்வேறு மருத்துவ பரிசோதனைகள் அனைத்தும், பொதுமக்களுக்கு இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம், பல் மருத்துவம், எலும்பு மருத்துவம், நரம்பியல் மருத்துவம், மனநல மருத்துவம், சர்க்கரை நோய் மருத்துவம், நுரையீரல் நோய் மருத்துவம், பொது மருத்துவம், இருதய மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், தோல் மருத்துவம், சித்த மருத்துவம்,இயன்முறை மருத்துவம், அறுவை சிகிச்சை மருத்துவம், மகப்பேறு மருத்துவம் உள்ளிட்ட 17 வகையான சிறப்பு மருத்துவ நிபுனர்களை கொண்டு, சிறப்பான மருத்துவ சேவைகளும் இம்முகாமின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுவர்களுக்கு எக்கோ பரிசோதனை (Echocardiogram), எக்ஸ்ரே (X-Ray), அலட்ராசவுண்ட ஸ்கேன் (USG), பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் இம்முகாம்களிலேயே மேற்கொள் வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சிறப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தாய் சேய் நல ஊட்டச்சத்து பெட்டகங்களும் வழங்கப்படவுள்ளது. அதுமட்டுமன்றி, இம்முகாம்களின் வாயிலாக, முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டு அட்டை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ்களும் வழங்கு வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக, முகாமிற்கு வருகைபுரியும் பொதுமக்கள் தங்களின் ஆதார் அட்டையின் நகலினை கொண்டு வருதல் அவசியமாகும். மேலும், இம்முகாமில் காப்பீடு அட்டை வேண்டி விண்ணப்பிப்பவர்கள், குடும்ப அட்டை (Smart Card), ஆதார் அட்டை மற்றும் கிராம நிர்வாக அலுவலரிடம் தங்களது ஆண்டு வருமானம் ரூபாய் 1.20 இலட்சத்துக்கு குறைவாக உள்ளத ற்கான சான்று ஆகியவைகளை கொண்டு வருதல் வேண்டும்.

இதுபோன்று, உயிர் காக்கும் தரமான மருத்துவ சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டமானது, செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதனை பொதுமக்கள் கருத்தில் கொண்டு, தங்களது பகுதிகளில் நடைபெறவுள்ள "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாமினை பயன்படுத்திக் கொண்டு, தங்களது உடல்நலத்தினை முறையாக பேணிக்காத்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தெரிவித்துள்ளார்.



## பம்மல் மாற்றுத்திறனாளிகள் அறக்கட்டளை சார்பில் தீபாவளி மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது

செங்கல்பட்டு, அக்.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மலில் உள்ள அறக்கட்டளையின் 18.10.2025 அன்று தீபாவளி கொண்டாட்டம் இனிப்புகள் பட்டாசுகள் வழங்கி பட்டாசுகள் வெடித்து மாற்றுத்திறனாளிகள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும் இதில் சிறப்பு விருந்தினராக ரங்கராஜன், சமூக ஆர்வலர் புவனேஸ்வரி, அன்னை தெரேசா சங்க நிர்வாகி கௌரி ஷங்கர், பிசியோதெரபிஸ்ட் மற்றும் அறக்கட்டளையின் இயக்குனர் பம்மல் பி.கவிதா, தலைவர் பம்மல் கலா, கௌரவ தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் எஸ்.தேவி அனகாபுத்தூர் கிளை செயலாளர் சரவணன், குரோம்பேட்டை கிளைச் செயலாளர் திருநாவுக்கரசு, கீரப்பாக்கம் கிளை சதீஷ் பாபு, செயலாளர்கள் அறக்கட்டளை உறுப்பினர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டு தீபாவளி பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது

## பட்டியல், பழங்குடியினர் நடத்தும் நிறுவனங்களிடம் 5% பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும்: தமிழ்நாடு அரசு

சென்னை, அக்.24-

பட்டியல், பழங்குடியினர் நடத்தும் நிறுவனங்களிடம் 5% பொருட்களை கொள்முதல் செய்ய வேண்டும். 5சதவீதம் கொள்முதல் செய்தது தொடர்பான டெண்டர் விவரங்களை 3 மாதத்திற்கு ஒருமுறை அறிக்கையாக தர வேண்டும் என அனைத்து மாவட்ட அட்சியர்கள், பொதுத்துறை நிறுவனங்கள் மாநகராட்சி, நகராட்சிகளுக்கு செலவீன செயலாளர் கடிதம் எழுதியுள்ளார். தமிழ்நாடு அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் இடெண்டர் மூலம் பொருட்களை கொள்முதல் செய்கின்றன.



## ஸ்ரீ ஆறுபடையோன் பக்த சபை முருகன் கோவில் கந்த சஷ்டி திருக்கல்யாணம்

தேனி, அக்.24-

தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் போடி மாநகரில் கன்னி மூலையில் குலாளர் பாளையம், பங்காரு நாயக்கர் மேற்கு தெரு ஜ.கா.நி. மெட்ரிக் மேல்நிலை ப்பள்ளி எதிரில் அமைந்துள்ள ஸ்ரீ ஆறுபடையோன் பக்த சபை முருகன் கோவிலில் தனக்கென்று கம்பீரமாக அமர்ந்து வேண்டியவர்களுக்கு வேண்டிய வரங்களை அருள்பாலித்துவரும் அருள்மிகு வள்ளி, தேவசேனா சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு ஐப்பசி மாதம் 5ம் நாள் 22.10.2025, புதன்கிழமை முதல் ஐப்பசி மாதம் 11ம் நாள் 28.10.2025 செவ்வாய்க்கிழமை வரை கந்த சஷ்டி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. 22-10-2025 அன்று காலை சேவல் கொடியேற்றத்துடன் தொடங்கினர்.

புன்யாஹ வாசனம், கணபதி ஹோமம், வாஸ்து சாந்தி விக்னேஸ்வர பூஜை. மஹா அபிஷேகம், ஸ்ரீ சுப்பிரமணிய மூலமந்திர ஹோமம் பூர்ணாஹூதி தீபாராதனை. கும்பலங்காரம். கத சஷ்டி கவச பாராயணம். வேல் மாறல் வழிபாடு பாராயணம். உற்சவ மூர்த்தியான முருகப்பெருமானை நகரின் முக்கிய வீதிகளில் தேரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இரவு 8.00 மணிக்கு தீபாராதனை காட்டப்பட்டு பிரசாதம் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியின் தலைமை T.B.S.S.C.S. வடமலை ராஜைய பாண்டியன், ஜமீன்தார். முன்னிலை . முருகேசன் அருள்செல்வி போடி, தலைவர். முருகன் ரெங்கவிலாஸ், .காமாட்சி துணைத் தலைவர், .முருகவேல் செயலாளர், .சன்னாசி துணை செயலாளர்,. தங்கம் பொருளாளர், . மல்லீஸ்வரன் வழக்கறிஞர் மற்றும் பக்தர்களும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

## சிவகங்கை அருகே இளைஞர் கொலை உறவினர்கள் போராட்டம் 3 பேர் கைது

இளையான்குடி, அக்.24-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இளையான்குடி அருகே உள்ள கண்ணமங்கலம் கிராமத்தை சேர்ந்தவர் சங்கர்(29)இவர் சொந்தமாக ஆட்டோ மற்றும் கார் வைத்துடிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறார். இவர் நேற்று முன்தினம் இரவு தனது காரில் வெளியே சென்று விட்டு தாயமங்கலம் வழியாக சொந்த ஊர் திரும்பியுள்ளார். தாயமங்கலம் அருகே வரும்போது சாலையின் குறுக்கே இரு சக்கர வாகனம் நின்றது. அதை எடுக்குமாறு சங்கர் கூறும்போது, அங்கிருந்த தாயமங்கலத்தைச் சேர்ந்த பாண்டி மகன் செல்வகுமாருக்கும், சங்கருக்கும் வாய்த் தகராறு ஏற்பட்டது இதனை அடுத்து கிராமத்துக்கு திரும்பிய அவரை அது சம்பந்தமாக பேசுவதற்காக தாயமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த முத்துவேல், செல்வகுமார் ஆகியோர் தாயமங்கலம் அழைத்துச் சென்றுள்ளனர். பேச்சுவார்த்தையின்போது இரு தரப்புக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது சங்கரை அந்த கும்பல் தாங்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளால் சராமாரியாக வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதைத் தடுக்க முயன்ற



கார் ஓட்டுநர் அன்புச் செல்வனையும் வெட்டி விட்டு தப்பினர். இதில் பலத்த காயமடைந்த சங்கரை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். இதில் சங்கர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்த நிலையில் அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய கோரி உறவினர்கள் இளையான்குடியில் கண்மாய் கரை அருகே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.தகவலறிந்து அங்கு சென்ற போலீஸார் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை கலைந்து போகச் செய்தனர். இதுதொடர்பாக இளையான்குடி போலீஸார் வழக்குப் பதிந்து கொலை வழக்கில் ஈடுப்பட்ட செல்வக்குமார், முத்துவேல், பிரேம்குமார் ஆகிய 3 பேரையும் கைது செய்து நீதிபதி முன் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைத்தனர். சிவகங்கை மாவட்டத்தில் கொலை சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடைபெறுவதால் பொதுமக்கள் அச்சத்தில் உள்ளனர். போதிய அளவிலே காவலர்கள் ரோந்து பணி இல்லாததால் குற்ற சம்பவங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என பொது மக்கள் குற்றச்சாட்டு வைத்துள்ளனர்..

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161